செல்வி. கனகமணி வீரவாகு ஆசிரியை அவர்களின்

# மணிவிழா சிறப்புமலர்

60



# கனகம்

கிளி/ வேம்போடுகேணி சி. சி. த. க. பாடசாலை

இத்தாவில், பளை

16.03.2017

# மணிவிழா மலர்

# கனகம்

ஆசிரியை செல்வி கனகமணி வீரவாகு

அகவை அறுபது

கிளி/ சோரன்பற்று சி. சி. த. க. பாடசாலை

இத்தாவில் - பளை

16. 03. 2017

# மணிவிழா மலர்

# கனகம்

## ஆசிரியை செல்வி. கனகமணி வீரவாகு

அகவை அறுபது

**கிளி/ வேம்போடுகேணி சி. சி. த. க. பாடசாலை**

**இத்தாவில் – பளை**

16.03.2017

# பாடசாலைக் கீதம்

சீர்மலிபளையூர் மருங்கமைந்த எம்
வேம்போடுகேணியூர் கலையகம் வளர்க
கவின் வயர் பனைவளம் சூழ்ந்திரும் - இங்கு
இனியனக்கனிதரும் பயிர் வளமுண்டு
இயற்கைவழங்கிடும் வளம் பலகொண்டு
ஈட்டுவோம் சிறப்புக்கள் கூட்டாகச் சேர்ந்து (சீர்மலி)

வாய்மையும் நேர்மையும் உயிரெனக் கொள்வோம்
வாழ்விலேசீர்பெறவருந்திஉழைப்போம்
பாரினில் உத்தமராய் உயர்ந்திடவே—நாம்
பயனுறுவகையினில் பாடங்கள் பயில்வோம்
பாடங்கள் பயில்வோம் பாடங்கள் பயில்வோம்


சேவைக்களைப்பும் களிப்பும்



## *மலரின் உள்ளே...........*


- மணிவிழா செயற்குழு
- மணிவிழாநாயகியின் விபரக்குறிப்பு
- மலராசிரியர் மனப்பதிவு
- ஆலயப்பூசகர் ஆசிச்செய்தி
- பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி
- முதன்மை விருந்தினரின் வாழ்த்துச்செய்தி
- அதிபரின் வாழ்த்து
- கோட்டக்கல்வி அலுவலர் வாழ்த்து
- தன்வாழ்வெண்ணாத் தனித்துவமானவர்.........
- சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வாழ்த்து
- நான்கண்ட கனகமணி....... வாழ்த்து
- மேயர் யோகா பற்குணராசா வாழ்த்து
- கனகமணிக்குன்றே வாழி - ஆசிரியர் கழகம்
- அமைதியின் உருவாய்........ – லண்டன் பழைய மாணவர்
- உயர்கல்வி என்ற கோபுரத்தின்.........
- ஆலயதீபமே வாழி
- **Importance of English**
- பரீட்சைகளைப் பயமின்றி எதிர்கொள்ள..........

- சேவைநலன் பாராட்டு
- ஆசிரியர் தினம்
- இசை எனும் காதலி........
- டெங்கு விழிப்புணர்வு
- எம்பள்ளிக்கான பார்வை
- மணிவிழா நாயகியின் உள்ளத்திலிருந்து.......



## நூல் விபரம்


மலரின் பெயர்: கனகம்

பொருள்: மணிவிழாச் சிறப்புமலர்

வெளியீடு: கிளி/வேம்போடு கேணி சி.சி.த.க. பாடசாலை

முகவரி: இத்தாவில், பளை

காலம்: 16.03.2017

நூலுக்கான நிதி அனுசரணை: பழையமாணவர் சங்கம், லண்டன்

அச்சுப்பதிப்பு: கிங்ஸ் பதிப்பகம், புத்தூர்ச் சந்தி, மீசாலை

பக்கங்கள்: i - vii + 1 - 49

## கனகம் மணிவிழாமலர்- 2017

*மலர் இணையாசிரியர்கள்*

திரு.க.சுந்தரலிங்கம் (உப.அதிபர்)

திருமதி.கே.வெண்ணிலாகேதீஸ்வரன்(ஆசிரியர்)

*மணிவிழாக்குழு*

1. தலைவர்,திரு.க.க.சண்முகதாஸ் (அதிபர்)
2. செயலாளர் திரு.மூ.சர்வதாஸ்
3. பொருளாளர்,திரு.ம.யோட்ஜ்
4. உறுப்பினர்கள்
    1. திரு.க.சுந்தரலிங்கம் (உப அதிபர்)
    2. திருமதி.கே.வெண்ணிலா (அசிரியர்)
    3. திருமதி.க.கவிதருபனா (ஆசிரியர்)
    4. திருமதி.சு.டுயந்தினி (ஆசிரியர்)
    5. திரு.பொ.தவராசா (பெற்றார்)
    6. திரு.ந.பொன்னையா (பெற்றார்)
    7. திரு.த.சிவமூர்த்தி (பெற்றார்)
    8. திருமதி.கே.கிருஸ்ணவேணி (பெற்றார்)
    9. திருமதி.ப.விஜயலலிதா (பெற்றார்)

# ஆசிரியை கனகமணி வீரவாகு

## மணிவிழா நாயகி விபரக்குறிப்பு

| | |
|---|---|
| பெயர்: | செல்வி.கனகமணிவீரவாகு |
| பிறந்ததிகதி: | 16.03.1957 |
| தற்போதையபதவி: | இ.ஆ.சேவைவகுப்பு 1(SLTS-1) |
| தற்போதையபாடசாலை: | கிளி/வேம்போடுகேணிசி.சி.த.க. பாடசாலை, இத்தாவில்,பளை |
| பிறப்பிடம்: | கெற்பேலி,மிருசுவில் |
| வதிவிடமுகவரி: | A9 வீதி, இத்தாவில்,பளை |
| கல்வி: ஆரம்பக்கல்வி: | யா/கெற்பேலி அ.த.க.பாடசாலை |
| | இடைநிலைக்கல்வி: யா/கச்சாய் அ.த.க.பாடசாலை |
| உயர்தரம்: | யா/மீசாலைவீரசிங்கம் மத்தியகல்லூரி |
| பணியிடங்கள்: | 16.01.1981- 15.03.1990 வரை- தொண்டர் ஆசிரியர் கிளி/ வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலை |

16.03.1990 முதல் நியமனம்: 03.01.2011 வரை

கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலை

04.01.2011 – 11.09.2012

கிளி/பளை மத்திய கல்லூரி

12.09.2012–15.03.2017

கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க.பா

பெற்றோர் விபரம்: திரு. கணபதிப்பிள்ளை வீரவாகு (அமரர்)

திருமதி. வீரவாகு கனகம்மா

சகோதரர்கள்: திரு. வீரவாகு புஸ்பராசா

திரு. வீரவாகு. கந்தசாமி

சகோதரிகள்: திருமதி. தங்கமுத்து சண்முகம்

திருமதி. தவமணி மயில்வாகனம்

திருமதி. சரஸ்வதி சண்முகதாஸ் (ஆசிரியை)

ஆசிரியர் குழாமுடன் மணிவிழா நாயகி



## மலராசிரியர் மனப்பதிவு



உங்கள் கைகளில் விரியும் “கனகம்” எனும் இச்சிறு நூல் கனகமணி ஆசிரியையின் பணிக்கால பதிவுகளாகும். இவரின் பதிவுகளைத் தாங்கிய இச்சிறு அச்சுக் கோர்வையை நூல் என்பதா? சஞ்சிகை என்பதா? அல்லது குறிப்பேடு என்பதா? எனும் தயக்கம் எம்முன் இருந்தாலும் கால வேகத்தில் கனிந்துள்ள கனகத்தை நூலென்றே சொல்லத் துணிந்துள்ளோம்.

இக் கனகத்தில் விரிந்துள்ள ஒவ்வொரு இதழ்தழும் ஏதோ ஒரு வகையில் கனதியானது தான். இதில் கூறப்பட்டுள்ள வாழ்த்துக்கள். கருத்துக்கள், கவிதைகள், படைப்புக்கள் ஒவ்வொன்றும் கற்பனைகளோ, அல்லது ஒப்புக்காய் கூறப்பட்ட விடயங்களோ அல்ல. கனகமணி ரீச்சரின் சுமார் கால் நூற்றாண்டு கால கல்விப் பணிக்காலத்தில் கண்டவைகள் தான் இவை.

மிகக்குறுகிய காலத்திட்டமிடலில் இக் “**கனகம்**” மலந்துள்ளது. எம்வித்தியாலய அதிபரின் ஆலோசனையும், வழிகாட்டலும் இப்பணிக்கு அடியுரமாய் அமைந்துள்ளது. இம்மலரின் இதழ்களிற்கு வலுவூட்டியோர் பலர். மிகக்குறுகிய கால வேண்டுதலில் வாழ்த்துரை தந்தோர் மதிப்புக்குரியவர்கள். ஆக்கங்கள் தந்த ஆசிரியர்கள்,

மாணவர்கள் நன்றிக்குரியவர்கள், எல்லாவற்றிற்கும் மேலாக கனகத்தின் மலர்வுக்காய் நிதி அனுசரணையை முழுமையாய் வழங்கிய எம் பள்ளியின் லண்டன் வாழ் பழைய மாணவர்கள் அனைவரும் ஆராதனைக்குரியவர்கள். விளம்பர அனுசரணை வழங்கிய "நிமல் வெல்டிங் வேக்ஸ்" நிறுவனத்திற்கும் நன்றிகள்.

எனது சக இணை இதழாசிரியராய் இருந்து காலநேரம் பாராது கைவிரல்களின் அதிவேகத் துடிப்பால் கணனிப்பதிப்புச் செய்தும் அனுபவப் பகிர்வாற்றியும் அல்லும் பகலும் உழைத்த ஆசிரியை திருமதி.வெண்ணிலா கேதீஸ்வரன் அவர்கள் என்றும் நன்றிக்குரியவர். அத்துடன் இச்சிறுகனகத்தை அவசர அவசரமாய் அழகுற அமைத்து வழங்கிய மீசாலை, புத்தூர்ச்சந்தி "கிங்ஸ்" பதிப்பகத்தினரின் சிறப்பான பணிக்கும் நன்றிகள் உரித்தாகும்.

நிறைவாக இந்நூலில் எழுத்துப் பிழைகள் ஏற்படாதிருக்க இயலும்வரை முயன்றுள்ளோம். இருப்பினும் கைமீறிப்போய், கண்மறைத்த பிழை இருப்பின் மன்னித்தருள்வீர்களாக. இதழின் உள்ளே சென்று விரிவாய் ஆய்ந்து இனிவரும் கால முயற்சிகளுக்கு ஊக்கம் தாருங்கள்.

**திரு. க. சுந்தரலிங்கம்**
இதழின் இணை ஆசிரியர்
உப அதிபர்

## அருள்மிகு

## நவனிவெளி கண்ணகை அம்மன் ஆலய பூசகரின் ஆசிச்செய்தி



எமது ஆலய பரிபாலன சபையின் உப செயலாளராக விருந்து ஆலயத் தொண்டாற்றும் செல்வி கனகமணி வீரவாகு ஆசிரியை அவர்கள் 35 வருடங்கடளுக்கு மேலாக ஆசிரியப் பணிபுரிந்து மணிவிழாக் காண்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். மேலும் ஆசிரியை அவர்கள் உடல், உள ஆரோக்கியத்துடன் தொடர்ந்தும் கல்விப்பணி, சமூகப்பணி, சமயப்பணியாற்றி சமூகத்துக்குச் சேவை செய்ய எல்லாம் வல்ல கண்ணகை அம்பாள் அருள்புரியப் பிரார்த்தித்து, ஆசிரியை அவர்களும், அவரின் தாயாரும், உறவினர்களும் அனைத்து சௌபாக்கியமும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்

**திரு .. சு.வைரமுத்து**
பூசகர்
நவனிவெளி அம்பாள் ஆலயம்,
வேம்போடுகேணி, பளை.

## ஆசிச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இத்தாவில் என்னும் கிராமத்தில் அமைந்துள்ள கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க. பாடசாலையின் உன்னத படைப்பாகிய '**கனகம்**' வெளியீடு என்னும் மலருக்க ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த காலப்போரின் வடுக்களைச் சுமந்த,கசப்பான அனுபவங்களைத் தாங்கி மீண்டெழுந்து உயர்ந்துநிற்கும் இப்பாடசாலையின் ஆரம்பக் கல்வி ஆசிரியர் செல்வி. வீரவாகு கனகமணி அவர்களின் ஆசிரியப் பணிமிகவும் மகத்தானது. "எழுத்தோதுவித்தவன் இறைவனாவான்" என்பதற் கிணங்க மாணவர்களின் அறிவுக் கண்களை திறந்த வாழ்நாள் ஆசான் இவர்.

தனது பாடசாலைக் கல்விப் பணியினை கருத்துடன் முடித்து ஓய்வு பெறும் இவ் ஆசிரியரின் எதிர்காலம் சிறப்புடன் மிளிரவும் "கனகம்" வெளியீடு என்னும் நாமத்தைத் தாங்கி வரும் இம் மலர் சிறப்புடன் அமைந்திட எல்லாம் வல்ல இறைவனின் ஆசீரும் மரியன்னையின் பரிந்துரையும் நிறைவாக கிடைத்திட ஆசித்து நிற்கின்றேன்.

**அருட்திரு. அ. சில்வெஸ்ரர்தாஸ்**
பங்குத்தந்தை
பளை.



## மணிவிழா நாயகிக்கு வாழ்த்துச் செய்தி

# செல்வி.கனகமணி வீரவாகு

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஒன்றான வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலையில் 16.03.1990ல் ஆசிரியையாக பதவியேற்று 16.03.2017 ல் சேவையிலிருந்து ஓய்வு பெறும் செல்வி வீரவாகு கனகமணியை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். 16.03.2017ல் இவர் அரச நியமனம் பெற்றாலும் அதற்கு முன்னர் எட்டு வருடங்கள் தொண்டர் ஆசிரியையாகப் பதவி வகித்தவர்.

செல்வி.வீ.கனகமணி அவர்கள் நான் கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளராகவும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும், பதவி வகித்த காலத்தில் நன்கு அறியப்பட்டவராகவும், அதற்கு மேலதிகமாக பளைக் கொத்தணி அதிபராகவும் பதவி வகித்த காலத்தில் வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளைப் பலமுறை மேற்பார்வை செய்த சந்தர்ப்பங்களில் இவரது கற்பித்தல் நடவடிக்கைகளை அவதானித்துள்ளேன். மேலும் யானும் பளைப் பிரதேசத்தில் வாழ்ந்துவருபவன் எனும் ரீதியிலும் இவரது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளோடு தொடர்புடையவன். கற்பித்தல் செயற்பாட்டில் 35 வருட கால சேவையை உடையவர் என்பதால் இவரிடம் மாணவ மாணவிகளாக இருந்தவர்களே வேம்போடுகேணி இத்தாவில், முகமாலைப் பகுதிகளில் வசிப்பவர்கள் அனைவரும் என்றால் மிகையாகாது. அத்துடன் இன்று இப்பகுதி அரச

சேவையாளர் அனைவரும் இவரிடம் கற்றவர்களாகவே இருக்க முடியும்.

செல்வி.வீரவாகு கனகமணி அவர்களிடம் நான் அவதானித்த பல சிறப்பம்சங்கள் உள்ளன. இவர் ஊரறிந்த ஒரு ஆசிரியை. கனகமணி ரீச்சர் என்றால் தெரியாதவர்கள் எவரும் இருக்கமுடியாது. வகுப்பறையில் மாணவர்களோடு மாணவர்களாக இருந்து கற்பிப்பார். யாவரையும் அன்போடு அரவணைத்துக் கொள்வார். கோபித்துத் தண்டிக்கமாட்டார். பாடங்களைக் கற்பிக்கும் போது முற்கூட்டியே பாடத்தை தயார்படுத்திய பின்பே வகுப்பறைக்குள் நுழைவார். என்னைப் பொறுத்தவரை அவர் லீவு எடுத்தாரா என்பதும் கேள்விக்குறியாகும். பாடசாலை முடிந்த பின்பும் நின்று கற்பிப்பார்.

சுருங்கக் கூறின் ஒரு நல்லாசிரியையிடம் என்ன என்ன தகுதிகள் இருக்க வேண்டுமென கல்வி உலகம் எதிர்பார்க்கும் அனைத்து தகுதிகளுமுடைய பூரணமான ஒரு ஆசிரியையாவார். கற்பித்தல் செயற்பாட்டுடன் மட்டுமன்றி பாடசாலையின் விளையாட்டுப் போட்டி, தமிழ், ஆங்கில விழாக்கள் அனைத்திலும் தன்னை இணைத்துக் கொண்டவர். எவருக்கும் எந்நேரமும் உதவி செய்வதில் முன்னின்றவர்.

ஆரம்பக் கல்வித் துறையில்அவர் பெற்ற பயிற்சி ஆரம்பக் கல்வியை வளர்த்தெடுப்பதில் மிகப் பெரும் வெற்றியைப் பெறக் காரணமாய் இருந்தவர். 16.03.2017ல் அவர் சேவையில் இருந்து ஓய்வு பெறவேண்டியது அரச நியதியாயினும் அதன் பின்னரும் அவர் இப்பகுதி மக்களுக்கு கல்விச் சேவையாற்ற வேண்டுமென யான் அவரிடம் வேண்டுகின்றேன்.

ஓய்வின் பின் அவரும் அவரது தாயாரும் உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு. ப. அரியரத்தினம்**
மாகாணசபை உறுப்பினரும்,
ஓய்வுநிலை மேலத மேலதிக கல்விப் பணிப்பாளரும்



# பாடசாலை அதிபரின் மணிவிழா வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலையிலேயே பணியை ஆரம்பித்து இங்கேயே பணி நிறைவு செய்கின்ற சந்தர்ப்பமானது மிக மிக அரிதாகவே கிடைக்கும் சந்தர்ப்பமாகும். அவ்வாறான பாக்கியத்தை செல்வி கனகமணி வீரவாகு அவர்கள் பெற்றிருப்பது மகிழ்ச்சியான விடயமாகும். குடும்பநிலை மிகவறுமையாக இருந்த காலப்பகுதியில் ஊதியம் எதனையும் எதிர்பாராது 8 வருடங்கள் ஆசிரியத் தொண்டாற்றியமை என்பது இவரது பெரும் சாதனை என்றால் அது மிகையாகாது. பாடசாலை பாதிக்கப்பட்ட காலப்பகுதிகளில் எல்லாம் தோள்கொடுத்து தூக்கி நிறுத்தியவரும் இவரேயாவார். 2012ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்ட போது, ஆசிரியை அவர்கள் இங்கு மீளக்குடியமராதவிடத்தும், மிக நீண்ட தூரத்தில் இருந்து தனி ஒரு ஆசிரியையாக துணிச்சலுடன் இங்கு வந்து பொறுப்பேற்று நடாத்தியுள்ளார். அதிபர் இல்லாத நாட்களில் எல்லாம், அதிபர் பணியினை தானே பொறுப்பேற்று செயற்படுத்தியுள்ளார். இவரிடம் ஒப்படைக்கும்

பொறுப்புக்களை செம்மையாக நிறைவேற்றி ஏனையவர்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்துள்ளார். தற்போது அவரிடம் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோருக்கும், அவர்களின் பெற்றோருக்கும் என மூன்று தலைமுறையினருக்கு கற்பித்த பெருமைக்குரியவர். மொத்தத்தில் இவர் ஓய்வு பெற்றுச் சென்றாலும், தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாடசாலைக்கு வருகை தந்து மாணவர் முன்னேற்றத்துக்கு உதவிட வேண்டிக் கொள்வதுடன் ஓய்வு காலத்தில் அவரும், தாயாரும் நல்ல உடல், ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுளுடனும், சகல சௌபாக்கியத்துடன் இன்புற்று வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

"வாழ்க வளமுடன்"

**திரு. க. சண்முகதாஸ்**
அதிபர்

## மணிவிழா நாயகியை மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்



இருபத்தேழு ஆண்டுகளுக்கு மேல் சிறார்களுக்குக் கல்வி புகட்டி, மணிவிழாக் கண்டு ஓய்வு பெறும் ஆசிரியப் பெருந்தகையே! செல்வி கனகமணி வீரவாகு ரீச்சர் உங்களை இன்நாளில் மனமார வாழ்த்துகின்றேன். 27 ஆண்டுகள் ஆரம்பப் பிரிவுகளில் பல பாடசாலைகளில் பணியாற்றி அப்பிஞ்சுகளின் உள்ளத்தில் இடம்பிடித்து, அவர்களின் அறிவுப் பசிக்குக் கல்வி எனும் உணவூட்டி, எதிர்காலச் சந்ததிகளை உருவாக்க அத்திவாரம் இட்டவரே! நீங்கள் இட்ட அத்திவாரத்தை ஆதாரமாக வைத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் தம் வாழ்க்கை என்ற சிறந்த மாளிகைகளை அமைத்து மகிழ்ந்திருப்பர். மற்றவர்களை உயரத்திற்கு உயர்த்தி விடுபவர்களே ஆசிரியர்கள். மாணவரை உச்சிக்கு ஏற்றும் ஏணிகளே ஆசிரியர்கள். என்ற கருத்திற்கு ஏற்ப இவ்வளவு காலமும் எத்தனை ஆயிரம் குழந்தைகளுக்கு ஏணியாய் இருந்தீர்களோ. அவை தாம் உங்களுக்கான சொத்துக்கள். உங்களின் உயர் வாழ்க்கைக்கு வளமூட்டும் உரங்களும் இவையே. இவை தான் ஓர் உன்னதமான ஆசானுக்குரிய வெகுமதிகளும், பரிசில்களும் ஆகும். ஓய்வு உங்கள் அரச பணிக்கே. ஆசிரியம் தொடரவேண்டும். அயலில், சுற்றத்தில், கிராமத்தில் உள்ள பிஞ்சுகளுக்கு உங்கள் வீட்டுத்

திண்ணை பள்ளிக்கூடமாக இருக்கவேண்டும். உடலுக்கு இயலும் வரை உங்கள் கல்விச் சேவை தொடரவேண்டும் என விரும்புகின்றேன். நீண்ட காலம் சேவையாற்றிய உங்களுக்கு இறைவன் என்றும் அருள் புரிந்து காக்கவேண்டும் என இறைஞ்சி ஓய்வு காலமும் உன்னதமாய் அமைந்துவிட வேண்டும் என்பதையும் வேண்டி மீண்டும் வாழ்த்தி மகிழ்வடைகின்றேன்.

**திரு. ஐ. குகானந்தராஜா**
கோட்டக்கல்வி அலுவலர்,
பளை.

# தன்வாழ்வெண்ணாத் தனித்துவமானவர்



காலத்தின் பதிவுகள் கனதியானவை. எங்கள் கனகமணி ஆசிரியையின் காலமும் கனகதியான கணப்பொழுதுகள் நிறைந்தது. குண்டுவீச்சுக்கள், இடப்பெயர்வுகள், அவல வாழ்வுகள், அடுத்தநொடி

ஏது நிகழுமோ என்ற ஏக்கம் நிறைந்து, ஓடி ஓடி கால்கள் நொடிந்துபோன, நிம்மதியற்ற நிகழ்வுகள் நிகழ்ந்தேறிய நாட்கள் அவை.

அவ்வாறான காலங்கள் அனைத்திலும் கனகமணி ரீச்சர் கனகணியாகவே இருந்தார். கல்வி பயின்ற ஆரம்பகாலத்தில் வசதிக் குறைவுகளால் வாடியிருந்தார். கூடியிருந்த குடும்பத்தின் தலைமைப் பொறுப்புக்குத் தலைப்பட்டார். இருந்தும் தேடிய கல்வியில் தேறி நிமிர்ந்தார். அன்னை பிறந்த இடத்தில் வாழ வந்தவர் அயற் பள்ளியாம் எம்பள்ளியில் தொண்டராய்க் கல்விப்பணி தொடர்ந்து செய்தார். அவ்வேளை தேடிவந்த நியமனம் ஏற்றுக் கொண்டு ஆரம்பக்கல்விக்கு மகுடம் சேர்த்தார்.

அவரின் காலம் எங்கள் பள்ளியில் ஆரம்பப் பிரிவே 10 வகுப்புக்களைக் கொண்டிருந்தது. இக்காலத்தில் ஆரம்பப் பிரிவு வகுதித் தலைவராய் இருந்து துடிப்போடு செயற்பட்டார். பள்ளியின் நிதிப்பெறுகையிலும், கணக்குப் பேணுகையிலும் தலைமைக்கு வலுச்சேர்த்தார். தனிவாழ்வில் தூய்மை, பொதுவாழ்வில் நேர்மை எதுவரினும் கலங்காமை, உதவுதலில் முன்னிற்கும் முனைப்பு, முடிவெடுத்தாற் பின்வாங்காத் துணிவு இன்னும் எவ்வளவோ இவரியல்பு இயம்பமுடியும்.

பள்ளி வரும் பிஞ்சுப் பாலகர் நெஞ்சங்களில் நிறைந்திருப்பவர். எண்ணற்ற இளசுகளிற்கு எழுத்தறிவித்த இறைமகள் இவர். ஆரம்ப கணிதம் கற்பித்த கணித ஆசான் இவர். எழுத இடர்படும், வாசிக்கத் தடைப்படும் மாணவர் இடர்களைந்து கரைசேர்த்த ஓடம் இவர். கல்வியில் கீழ்மையுற்றிருந்த எண்ணிலடங்கா மாணவரை மேலுயரச் செய்த ஏணி இவர். எத்தனையோ மாணவர் மனங்களில் மாறா நிறைவுகளோடு தேனாய் இனிப்பவர். வேளைக்கே பள்ளி வந்து , வேலைகள் முடிந்தும் வேகமாய் வீடு செல்ல விரும்பாத கடமையே கண்ணானவர்.

இவர் காலத்தால் செய்த மாணப் பெரிதான கல்விப் பணியின் சிறப்பையும் மறவா நினைப்பையும்,மணிவிழாச் செய்தி அறிந்த உள்நாட்டினரும்,புலம்பெயர் நாடுகளில் வாழும் மாணவ உறவுகளும் பகிர்ந்து கொண்ட முகநூல் பதிவுகள் சான்று பகரும். தன் வாழ்வெண்ணி வாழாது மாணவர் நல்வாழ்வு எண்ணிச் செய்த சேவையின் அடையாளம் தான் இன்றைய மணிவிழாவாகும்.

இடப்பெயர்வின் போது நோயுற்று இறுதிக் கணங்களை நெருங்கிய தன் அன்னையைத் தாங்கி வந்து இன்றுவரை பேணிக்காத்து நிற்கும் தாய்க்கும் தாயான இவர் தனித்துவமானவர். தன் பிள்ளைகளாய் எண்ணி சோதரர் பிள்ளைகள் கல்விக்காய் செய்த உதவிகள் ஏராளம். இவரின் இளைய சோதரி சரஸ்வதி சண்முகதாஸ் அவர்களும் தன் வழியில் ஆசிரியப் பணிக்கு வர இவரது வழிகாட்டலும் துணை நின்றது எனலாம். தன் ஓய்வுக்காலத்தில் இவர் அமைத்த புதுமனையில் தாயும் தானுமாய் இருந்து பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

நன்றி

**திரு. க. சுந்தரலிங்கம்**
உப அதிபர்

# மணிவிழா வாழ்த்துச் செய்தி
# செல்வி கனகமணி வீரவாகு

கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் பளைக் கோட்டப் பாடசாலைகளில் ஒன்றான கிளி/ வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலையில் 16.03.1990ஆம் ஆண்டு ஆசிரியராக முதல் நியமனம் பெற்று 16.03.2017 திகதி ஆசிரியராய் சேவையில் இருந்து ஓய்வுபெறும் வீரவாகு கனமணி அவர்களை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

ஆசிரியை செல்வி வீரவாகு கனமணி அவர்கள் 16.01.1981 தொடக்கம் 15.03.1990 வரை தொண்டராசிரியராக கிளி/ வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலையில் கற்பித்துள்ளார். ஆசிரியர் நியமனத்தின் பின்னர் 1991 – 1994 வரை தொலைக்கல்விப் பயிற்சியையும் பெற்றுள்ளார். நான் 05.05.2003 கிளி/ இயக்கச்சி அ.த.க.பாடசாலைக்கு ஆரம்பக் கல்வி ஆசிரியராக நியமனம் பெற்று வந்தேன். அக்காலத்தில் இருந்து ஓய்வு பெறும் காலம் வரை அவருடைய பணியை நன்கு நேரிலே அறிந்துள்ளேன். ஆயினும் 2000ஆம் ஆண்டிற்கு முன்னர் அவருடைய பணியை பற்றி சமூகத்தினர், கல்வி அதிகாரிகள், மற்றும் சக ஆசிரியர்கள், அவரிடம் கற்ற மாணவர்கள், அதிபர்களிடமிருந்து மேலும் அறிந்துள்ளேன்.

2003ஆம் ஆண்டிலிருந்து 2006ஆம் ஆண்டு வரை கிளி/ வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலையிலும் நாட்டின் யுத்த சூழ்நிலை காரணமாக 2006ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு வரை சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்திலும் கடமையாற்றி கிளிநொச்சி மாவட்டித்திலிருந்து இடம்பெயர்வு காரணமாக வவுனியா

மாவட்டதிற்கு சென்றிருந்தார். செட்டிகுளம் இராமநாதன் முகாமில் திருவள்ளுவர் வித்தியாலயத்தில் 2009 – 2010 வரை இணைப்புப் பெற்றிருந்தார். மீளவும் மீள்குடியேற்றத்திற்குப் பின் 2010- 2012 வரை கிளி/ பளை மத்திய கல்லூரியிலும், 12.09.2012 இலிருந்து 16.03.2017 இன்று வரை கிளி/ வேம்போடுகேணி சி.சி.த.க. பாடசாலையிலும் அரும்பணியாற்றி ஓய்வுபெறுகின்றார்.

செல்வி வீரவாகு கனமணி அவர்களுடன் பளைக்கோட்டத்தில் நானும் சக ஆசிரியராக சேர்ந்து கடமையாற்றியுள்ளேன். பல செயலமர்வுகளிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் ஒன்றாகச் பங்குபற்றியுள்ளேன். 01.01.2011ஆம் திகதியிருந்து நான் சேவைக்கால ஆசிரியராக பதவியேற்ற பின்னர் இவருடைய பாடசாலைக்குத் தரிசிப்பிற்காகச் சென்றிருக்கின்றேன். அவர் தனது வேலைகளைப் பிற்போடாது அன்றன்றே செய்து முடிப்பவர். வகுப்பறைக் கற்பித்தலின் போது தினமும் பாடமுன்னாயத்துடனேயே நுழைபவர். கற்றல் ஆவணங்களை சரிவர ஏனையவர்கள் தலையீடுகள் இன்றி சுயமாகவே நிறைவேற்றுவார். அவசரப்பட்டு கதைக்கமாட்டார். பொறுப்பு மிக்கவர். கோட்டமட்ட ஆரம்பப் பிரிவு செயற்பட்டு நிகழ்வு என்றால் வருடாவரும் சமய ஆசாரப்படி பொறுப்பு நின்று மங்கல நிறைகுடம் வைக்கும் ஆன்மீக ஆசான்.

ஆரம்பக்கல்வி மாணவர்களுடன் தனித்தனியாக அருகே சென்று பாடம் சொல்லிக்கொடுப்பவர். சிறிய பிள்ளைகளை செல்லமாகப் பேசுவார். செல்லமாக அரவணைத்துக் கற்றலையும், நல்ல பழக்கங்களையும் முன்வைப்பவர். கண்ணை இமை காப்பது போல மாணவர்களின் செயற்பாடுகளை உன்னிப்பாக

அவதானித்து, கற்றலை மேற்கொள்வதில் சிறந்தவர். இவ்வாறான குணாம்சங்களை உடைய ஆசிரியருடன் நான் பண்பாகவும், மரியாதையாகவும், கௌரவமாகவும் நடந்து கொண்டேன். அவருடைய சேவையை,பணியை உன்னதாமாக மதிக்கின்றேன். 16.03.2017ஆம் திகதி ஓய்வு பெறும் செல்வி.வீரவாகு கனமணி ஆசிரியர் தொடர்ந்தும் கிராமத்திலுள்ள சிறிய பிள்ளைகளுக்குக் கல்வியை ஊட்டவும், பாடசாலைக்கு ஆரம்பக்கல்வி ஆலோசனைகள் கிடைக்கச் செய்யவும் அவரிடம் வேண்டுகின்றேன்.

ஓய்வுபெற்ற பின் அவரும் அவரது தாயாரும், உறவுகளும் உடல், உள ஆரோக்கியத்துடன் சொந்த மண்ணில் வாழ்வாங்கு வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு. சு. சிவபாலன்**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்,
(ஆரம்பக்கல்வி)
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.



# நான் கண்ட ஆசிரிய மணி

தொழில்களுக்குள் புனிதமான தொழில் ஆசிரியத் தொழில். அத்தொழிலை சில தியாக மனங்கொண்டவர்கள் மேற்கொள்ளும் போது அது மேலும் புனிதமடைகின்றது. இதற்கு இலக்கணம் வகுத்தவர் ஆசிரியர் செல்வி வீரவாகு கனகமணி அவர்கள். பொன்னுக்கு கனகம் என்ற மறு பெயர் உண்டு. அந்தப் பொன் விலைமதிக்கக்கூடியது. ஆனால் கனகம் என்ற கனகமணி விலைமதிக்க முடியாதவர்.

1957.03.16 அன்று தென்மராட்சி கெற்பேலி எனும் கிராமத்தில் பிறந்தவர். ஆரம்பக்கல்வியை கெற்பலி அ.த.க.பாடசாலையிலும், தரம் 6 -11 வரை கச்சாய் அ.த.க.பாடசாலையிலும், உயர்தரத்தை வீரசிங்கம் மத்திய கல்லூரியிலும் முடித்தவர். இவருடைய ஆரம்பக் காலம் கல்லும் முள்ளும் நிறைந்த பாதையாகவே இருந்தது. தனது சிறுவயதில் அதாவது 11 வயதில் தந்தையை இழந்தவர். இருந்தாலும் துவண்டு விடாமல் உயர்தரம் வரை கல்வி கற்று பின் தனது உடல், பொருள் ஆவி அத்தனையையும் இத்தாவில் கிராமத்திற்காகவும், இத்தாவில் மக்களுக்காகவும் தியாகம் செய்தவர்.

1990.03.16 அன்று இவர் பயிலுநர் ஆசிரியராக கிளி/வேம்போடுகேணி சி.சி.தக.பாடசாலையில் நியமனம் பெற்றவர். அதற்கு முன் இதே பாடசாலையில் 7 வருடங்கள் தொண்டராசிரியராக எதுவித எதிர்பார்ப்பும் இன்றி கடமையாற்றியவர்.

சிறுவர்களின் கல்வியை வளர்த்தவர். இப்பாடசாலையில் 1991.01.24 அன்று அதிபராக நியமனம் பெற்றேன்.

செல்வி.வீரவாகு கனகமணி அவர்களின் திறமையை குறுகிய காலத்தில் அறிந்து கொண்ட நான் சுமார் 350 மாணவர்கள் கொண்ட 10 ஆரம்பக்கல்வி வகுப்புக்களின் பகுதித் தலைவராக பொறுப்புக்களைக் கையளித்தேன். இவரது தன்னலமற்ற சேவையால் வரலாற்றில் முதன்முறையாக 1994இல் தரம் 5இல் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவாகள் சித்தியடைந்தனர் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அத்துடன் வசதிகள் சேவைகள் கட்டணத்திற்கும் இவரே பொறுப்பாக இருந்து கடமையாற்றியது பாராட்டத்தக்கது.

சுருக்கமாகக் கூறினால் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர், அடக்கமுடையவர், பொறுமையில் பூமியை மிஞ்சியவர், தியாக உள்ளம் கொண்டவர், என்றும் சிரித்த முகம் கொண்டவர், கடிந்து சில வார்த்தைகள் கூறினாலும் சிரித்துக்கொண்டே கூறுவார். கடமை தவறாதவர், பொறுப்புக்களை ஏற்றுக் கண்ணியமாகச் செயற்பட்டவர். இப்படிப்பட்டவர் பாடசாலைக்குக் கிடைத்த பொக்கிஷம் என்றே கூறலாம். இவர் 16.03.2017 இன்று ஓய்வு பெறுவது பாடசாலைக்கு பேரிழப்பாக இருந்தாலும், அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். சந்தர்ப்பத்தை வழங்கிய பாடசாலை நிர்வாகத்திற்கு நன்றி கூறுகின்றேன்.

நன்றி

**திரு. க. கனகராசா**
ஓய்வுபெற்ற அதிபர்
*கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலை*

# ஆசிரியர் பெருந்தகை வாழ்க!

செல்வி கனகமணி வீரவாகு கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த ஆரம்பக்கல்வி ஆசிரியை. கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் பளைக் கோட்டப் பாடசாலைகளில் 30 வருடங்களுக்கு மேல் தனது கற்பித்தல் பணியை இறைவனுக்குச் செய்யும் சேவையாக எண்ணிப் பணி செய்தவர். இவரிடம் ஆரம்பக்கல்வி கற்ற பலர் இன்று உயர் பதவிகளில் இருப்பது கனகமணி ஆசிரியரின் அறுவடைகளாகும். இடம்பெயர்வு காலத்தில் கிளிநொச்சி வலயத்தின் ஏனைய கோட்டங்களிலும் தனது பணியைச் செம்மையாகச் செய்தவர். இவரின் கற்றல், கற்பித்தல் செயலொழுங்கு மாணவரின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கான ஊக்கலை வலுவூட்டும் என்பது நிதர்சனமான உண்மை. ஒவ்வொரு மணவனையும் இனங்கண்டு தேர்ச்சியடைய வைப்பதில் வல்லவர். இவர் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெறுவது கிளிநொச்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்விப் பிரிவுக்கு ஈடுசெய்ய முடியாத "ஆசிரியப் பெருந்தகை" ஆவார். இவர் தனது ஓய்வு காலத்தில் சுக நலத்துடனும், மகிழ்வுடனும் நீண்ட காலம் வாழ்க என்று மனதார வாழ்த்துகின்றேன்.

**திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா**

முன்னாள் அதிபர்,
யாழ் மநகர மேயர்

## கனகமணிக் குன்றே வாழி

இறைபணியாய் நிறைபணியாற்றி,
விடைபெறும் எங்கள் நிறைகுட நாயகியே!
கலைபல பயிற்றி தடை பல நீக்கி
நிலைபெற வைத்த நித்திலமே!
கதிரவன் விரி தெறி கதிராய்
அனுதினம் எங்கள் அருகிருந்த அறிவொளியே!
வேம்போடுகேணிப் பள்ளியின் விருட்ச வேரே!
வரலாறு தெரிந்த வாண்மையின் வரமே!
வாழ்க வளமுடன்!

வீரவாகு கனகம்மா விளைத்த மகளே!
கார வசனம் பேசாத கனிவு தரும் மணியே!
அரவணைத்துக் கல்வி அறிவூட்டிய அன்னையே!
ஆனது அறுபது ஆதலால் பணி ஓய்வு தந்தோம்
வாழி நீ வளமுடன்!!

எம் கழகத் தூணாய் இருந்து
தாங்கிய பணிகள் பற்பல என்போம்
எப்பணி தரினும் அப்பணி சிறக்க அயராதுழைத்தீர்
இத்தினம் இன்று உம்பணி போற்றி
மணிவிழா தந்தோம் வாழிய வாழிய
கனகமணிக்குன்றே வாழிய வாழிய!!!

**ஆசிரியர் கழகம்**
*கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலை*

## அமைதியின் உருவாய் ஆற்றலின் இருப்பிடமாய்

## பள்ளி நிகழ்வுகளின் நிழலுருவாய் !!!

கனகமணி ரீச்சர்...................

அமைதியின் உருவாய் ஆற்றலின் பேருருவாய் ............

பள்ளி நிகழ்வுகளின் நிழலுருவாய்......

இடர்மிகு காலங்களில்

பட்டமிட்டு விளையாடும் பச்சை மண்ணுகளை

பட்டறை போட்டு பாடம் புகட்டிய ஆசிரியை

இற்றவை தந்து கவலைகள் போக்கி

உற்றவை தந்தே உள்ளம் தொட்டவர்

ஆரம்பப் பள்ளியில் அடியொற்றி

ஓய்வுறு நிலைகாண் இதுவரை

தன்னிலை மாறா ஆளுமை விருட்சமாய்,

நிலம் வியக்கும் பொறுமை

நீல வானம் போல் பரந்த மனசு!

வேருக்கு நீர் போல் விளங்கி- நாளும்

தென்றலென நெஞ்சம் தீண்டிய ஆசிரியை,

புவியுலகைக் காட்டிலும் புண்ணியம் கொண்டது

நம் வேம்போடுகேணி பள்ளி மண்............

வசந்தம் வீசி வரும் காற்றாய் வாழ்விலே தூய்மை

கலைமகள் வடிவில் கண்ணெதிர் வாழும்
ஆசிரியை கிடைத்த வரம் என்றோ?
மண்ணிலே உம்புகழ் மாண்புற்று விளங்கட்டும்
எல்லையில்லா வல்லமை பெற்றோங்கட்டும் - உம்
பாதம் போற்றியே பாமாலை சூட்டினோம்
உங்களின் மென்மனதை ஆதரித்தே வாழ்ந்திடுவோம்
வாழும் காலம் வரையெல்லாம்
வானமும் வையகமும் வாழும் வரை,
வாழ்த்துகின்றோம் வாழ்க வாழி
வாழ்க வளமுடன்!

**பழைய மாணவர் சங்கம்**
**லண்டன்**



## "உயர்கல்வி என்ற கோபுரத்தின்" அத்திவாரம் ஆரம்பக்கல்வியாகும்"

பாடசாலைகள் என்பன அரசும், சமூகமும் எதிர்பார்க்கின்ற நல்வாண்மை மிக்க நற்பிரஜைகளை உருவாக்கிச் சமுதாயத்திற்குக் கையளிக்கும் அளப்பரிய சேவை நிறுவனமாகும். பாடசாலைகள் சமூகத்தினால் பிரசவிக்கப்பட்ட குழந்தைகளை உள்வாங்கிப் பாடசாலை நேரத்திற்குள் குழந்தையின் வளர்ச்சிக் காலம் வரை தன்னிடத்தே வைத்துப் பயிற்சி அளிக்கும் தொழிற்கூடம் ஆகும்.

குழந்தைகளின் உடல், உள வளர்ச்சி இயற்கையோடு இசைவுபட்டு இயல்பாய் வளர்ந்து கொண்டிருக்கும் வேளை ஒரு நிமிடமேனும் குழந்தையின் காலத்தைப் பயனற்ற முறையில் செலவிடாமல் நற்றிறன் மிக்க உளஆற்றலை வளர்க்கும் ஓர் உயிர்த்துடிப்புடன் இயங்க வேண்டிய பாடசாலையின் முக்கிய தளமான ஆரம்பப் பிரிவில் மாணவரை நற்சிந்தனை, நல்லொழுக்கம் உள்ளவராக வழிப்படுத்துவதன் மூலம் உயர் கல்வியை வளப்படுத்தலாம்.

இலங்கையில் கல்விக்கட்டமைப்பில் இடைநிலைக்கல்வி, உயர்கல்வி, பல்கலைக்கல்வி யாவற்றினதும் விழுமியங்கள், பெறுபேறுகள் என்பவை 1-5 வரையான ஆரம்பக் கல்வியின் உயர் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும். இதனாலேயே தான் உயர்கல்வி என்ற கோபுரத்தின் அத்திவாரம் ஆரம்பக்கல்வி என்ற எண்ணக்கரு கல்வியலாளர்களிடையே வலுப்பெற்று வருகின்றது.

ஆரம்பக்கல்வி என்னும் பதம் ஐந்து வயதினைப் பூர்த்தியடைந்த பிள்ளைகள் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரை பாடசாலையில் பெற்றுக் கொள்கின்ற கல்வியாகும். கல்வி பற்றிய எண்ணக்கரு குழந்தைகளின் மனங்களில் ஆரம்பக்கல்வி வகுப்புக்களிலேயே ஆழப்பதிக்கப்படுகின்றது.

சிரேஸ்ட மாணவர்களின் மகிழ்ச்சியான வரவேற்பும் ஆசிரியர்களின் தாய்மை உணர்வுமிக்க வரவேற்று பரிவு, உணவூட்டல் கலை நிகழ்வுகள் என்பன சின்னஞ்சிறிய பாலகர்களின் ஆழ்மனதில் நம்பிக்கையினைக் கட்டியெழுப்பும் முதற்படியாகக் கால்கோள்விழா அமைந்துவிடுகின்றது. இந்த நம்பிக்கை தான் அவர்களது உயர்கல்வி வரைக்குமான உறுதியான ஊன்றுகோலாக அமைகின்றது.

ஆரம்பக்கல்வியில் மாணவரின் கற்றலில் தேர்ச்சி முக்கியமாகும். தேர்ச்சி என்பது அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பன நிறைந்த ஒரு இயலுமை எனக் கூறலாம். இந்த வகையில் தொடர்பாடல், ஆளுமை, விருத்தி, சூழல், வேலை உலகிற்குத் தயார் செய்தல் சமயம், ஒழுக்காறு ஓய்வு நேரப்பயன்பாடு, விளையாட்டு, கற்றலுக்குக்கற்றல் போன்ற அடிப்படைத் தேர்ச்சிகளுடன் உயர் விழுமியங்களையும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல ஊட்டல் மிக முக்கியமாகும்.

அதேபோல அனுபவ ரீதியான, செயற்பாட்டு ரீதியான கல்வியும் அவர்கட்கு முக்கியம் என்பதை ஆரம்பக்கல்வி ஆசிரியர் உணர்தல் வேண்டும்.

ஏனைய பிரிவு ஆசிரியத் தொழிலை விட ஆரம்பக் கல்வி ஆசிரியத் தொழில் தெய்வீகத் தன்மை வாய்ந்தது. மூலப்பொருள் நிலையில் ஐந்து வயதில் கையளிக்கப்பட்ட மாணவரை பத:து

வயதில் இன்ன முடிவுப் பொருளாக வருவான் என்ற எதிர்வுகூறலுடன் உயர்கல்விக்கு அனுப்புபவர்கள் தான் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள். சரியான கலவைகள் கலக்கப்பட்ட மூலப்பொருள் ஒன்று எவ்வாறு உலகத் தரம் வாய்ந்த முடிவுப் பொருளாக பெருமை பெறுகின்றதோ அதே போன்று ஆரம்பக்கல்வி வயதில் மாணவர்களுக்கு கொடுக்க வேண்டிய பொருத்தமான யாவற்றையும் கொடுக்கும் போது உயர்கல்வியில் சமூகம் விரும்பும் உயர்கல்வியாளனாகவும் விழுமியப் பண்புள்ளவனாகவும், மாணவன் மிளிர்வதை எந்தச் சக்தியாலும் தடுக்கவோ தவிர்க்கவோ முடியாது.

ஆகவே தான் ஆரம்பக்கல்வி என்பது உயர்கல்வி என்னும் கோபுரத்தின் அத்திவாரம் என்பது வரலாற்று ரீதியான, விஞ்ஞான ரீதியான, உளவியல் ரீதியான உண்மையாக மிளிர்கின்றது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"

**திருமதி. சின்னப்பிள்ளை குலவீரசிங்கம்**
ஆசிரியர்



மாணவர்களுடன் மணிவிழா நாயகி



## ஆலய தீபமே வாழி!!

ஆலய தீபமாய் ஆறுதல் தரும்
ஆசானே
ஆலயம் தொழுவது மட்டுமல்ல
ஆதரவுக்கரம் நீட்டி
ஆச்சரியம் தரும் போதனைகள்
எமக்குள் ஊட்டி
உச்சி முகர்ந்து தாலாட்டுச்
சொல்லும்
இன்னுமொரு அன்னை
நீங்களல்லவா
அம்மா தரும் அறுசுவை
உண்டியும்
அப்பா சொல்லித் தரும் அறிவு
வார்த்தைகளும்
ஒன்றுசேர
மொத்தமாய் வந்துதித்த
விடிவெள்ளி நீங்கள்
பச்சைப் பசேல் என்ற
பென்னம் பெரிய
வயல்களின்

மனசு எங்களுக்கு
உங்களைச் சுற்றி வரும்
போதினிலே
எங்கள் எண்ணம் ஆலாய்
நீள்கிறதே
ஆசியும் கிடைக்கிறதே
வசந்தகால பூக்களின் மணங்கள்
நீங்கள் கற்பிக்கும் கல்விக்கு உண்டு
ஆதலால்
கற்றவருக்கு சென்ற
இடமெல்லாம் சிறப்பு என்று
சொல்லிச் சொல்லியோ
புத்திகள் புகட்டுவீர்கள்
கலங்கரை விளக்கே!
எங்கள் கனகமணி ஆசிரியரே!
ஏணிப்படியாக எம்மை ஏற்றியவரே!
ஏற்றம் பெறுக உங்கள் வாழ்வு!
இறைவன் அருள் கிடைத்திட
வாழ்த்துகின்றோம் இந்நாளில்



**தரம் 3 மாணவர்கள்**

# *Importance of English*

More people around the world than ever before are studying and learning English because it has become the international language of education and business. In today's world people realize the importance of English. It is the most widely spoken native language in the world. English may not be the most spoken language in the world, but it is the official language in a large number of countries. English is indisputably the primary language of global trade and commerce. It is the primary language used in international affairs. Learning to communicate in English is important to enter and ultimately succeed in mainstream America. Working knowledge of the English language can create many opportunities in international markets and regions.

Long ago, when God created human beings, they had only one language. And man grew so powerful that he tried to build a tower whose top would reach unto heaven. The gods grew jealous of man and they confounded man's speech.

This could be a mere story. But if we look at the glorious things man has achieved today, we can see the great role played by a common language that connects the whole world. And that language is none other than English. It has united us as Sri Lankans. It has united us in universal brotherhood.

But the role of English is most evident in one's education. There is no doubt that English is the language of learning. Most

of the world's books are written in English. Most of the research papers are published in English and one cannot even think of studying science without learning English. The internet has transformed our lives and it would be funny to imagine an internet without English.

The aim of Education is to create better citizens. It cultivates good manners and teaches children how to behave in social situations. Learning English also teaches good manners. For English is the politest of all languages. Why, you cannot even think of a job interview without the words 'good morning'.

English has fours skills; listening, speaking, reading and writing. I've always tell my students, **'To speak is to listen and to write is to read.'** Without the integration between these four skills, English will be clueless.

English is the most used language. When we come in touch with the people with different languages, they commonly use English to communicate. Almost 65 percent of people in the world use English regularly. Everyone realizes the importance of English and try to learn this language because he has no excuse to avoid himself from learning English, learning English is very important and has many advantages, such as improvement of our knowledge, more job opportunities, and good interact with local people when we travel to other countries.

***Mrs.Mythily Hariharan (Teacher)***

***(Kn/ Vembodukerney C.C.T.M.S)***

# பரீட்சைகளைப் பயமின்றி எதிர்கொள்ள சில வழிகள்

தற்கால கல்வி முறையில் பரீட்சைகள் அவசியமானதா? கல்வி கற்றவர் கிரகித்தவற்றை அளவிடுவதற்கு பரீட்சை ஒரு காத்திரமான முறையா? நீண்டகாலம் படித்த விடயங்களை குறுகிய நேரத்தில் மதிப்பிடுவது சரிதானா? இவ்வாறான கேள்விகள் பரீட்சை தொடர்பாக எழுப்பப்பட்டு வந்தாலும் கற்றல்- கற்பித்தல் துறைகளில் பரீட்சைகள் இன்றும் மிக முக்கியமாக இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

கற்றலினதும் கற்பித்தலினதும் தராதரத்தை வழிவகுக்கும் கல்வியினை மதிப்பீடு செய்வதற்குப் பரீட்சைகள் சரியான மதிப்பீட்டுக் கருவிகளாக இல்லாத போதும், தற்போது கைவசமுள்ள மதிப்பீட்டுக் கருவிகளில் பரீட்சைகள் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. எனவே பரீட்சைகள் தவிர்க்கமுடியாதவை. விரும்பியோ, விரும்பாமலோ அவற்றிற்கு முகங்கொடுத்தேயாக வேண்டும்.

ஆய்வாளர்களின் கருத்துப்படி எல்லாப் பரீட்சார்த்திகளும் ஏதோ ஒரு வகையில் பரீட்சைகளால் பதம் பார்க்கப்படுகின்றனர். பரீட்சாத்திகளின் மேல் பரீட்சைகள் பலவிதமான அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன.இவை உடல், உள அழுத்தங்களாகவும் அமைகின்றன. மனம் பயம்,மன உளைச்சல், சோர்வு, உறக்கமின்மை, ஓய்வின்மை, படபடப்பு போன்ற உடல், உள அழுத்தங்களையும் தருகின்றன. இவை ஒரு தளர்வு நிலைக்கு உடலையும், மனதையும் இட்டுச் செல்லக்கூடியன. எனினும் பரீட்சைகளை தேவையற்றவை என ஒதுக்கி விடவும் முடியாது. எனவே பரீட்சைகளை எதிர்கொள்ளுவதற்கான வழிகளை அறிந்து கொள்வோம்.

01) பரீட்சைக்கு முன்னர் திட்டமிடுதல்

பரீட்சைக்கான நேரசூசியை அடிப்படையாகக் கொண்டு பரீட்சைக் காலம், பாட ஒழுங்கு முறைக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி பாடங்களை மீளாய்வு செய்து படித்தல், ஒவ்வொரு பாடங்களுக்கும் உரிய நேரங்களையும் சரியாகப் பயன்படுத்தல், கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையளித்து பயிற்சி பெறல், சந்தேகங்கள், தவறுகளை ஆசிரியரின் உதவியுடன் திருத்தித் தெளிவடைதல்.

02) தன்னம்பிக்கை கொள்ளல்

என்னால் முடியும். நான் செய்வேன், நான் பரீட்சையை தகுதியுடன் எதிர்கொள்வேன், படித்த பாடங்களில் தெளிவு உள்ளது என நம்பவேண்டும். தேவையற்ற பயங்களை நீக்கி உறுதியுடன் இருக்க வேண்டும்.

03) பதட்டத்தைப் போக்குதல்.

பரீட்சைக்கு முன் ஏற்படும் பதட்டத்தைப் போக்க மனதை ஒழுங்குபடுத்தும் பயிற்சிகள், தியானங்கள் என்பவற்றில் ஈடுபடுதல், ஓய்வாக இருத்தல், விளையாடுதல், உடற்பயிற்சி செய்தல், மேலும் சுவாசப் பயிற்சிகள் போன்ற பயிற்சிகளில் ஈடுபடலாம்.

பரீட்சையின் போது கவனிக்கவேண்டியவை.

01. குறித்த நேரத்திற்கு முன்பாக பரீட்சை மண்டபத்திற்குச் சென்று உரிய இடத்தில் ஓய்வாக இருத்தல்.

02. வினாத்தாள்களை பூரணமாகவும், தெளிவாகவும் வாசித்தல், அறிவுறுத்தல்களை மிகக் கவனமாக வாசிக்க

வேண்டும். கட்டாயமாக விடையளிக்க வேண்டிய வினாக்கள், எத்தனை வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என்பவற்றை வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். முதலாம் வினா தொடக்கம் இறுதி வினா வரை நன்கு வாசிப்பதன் மூலம் இலகுவாக விடையளிக்கக் கூடிய வினாக்களை இனங்கண்டு கொள்ளலாம்.

03. நன்கு வாசித்து இனங்காணப்பட்ட வினாக்களில் சந்தேகமான, மயக்கம் தரும் வினாக்களைத் தவிர்த்துக் கொண்டு இலகுவான வினாக்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

பதில் எழுதக்கூடிய வினாக்களை தெரிவு செய்தபின் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிப்பதற்கான நேர ஒதுக்கீட்டைக் குறித்துக் கொண்டு பதில் எழுத வேண்டும்.

04. விடைகளை எழுதுகின்றபோது இலகுவாகவும், தெளிவாகவும், எளிதாகவும் எழுதக்கூடிய வினாக்களுக்கு முதலில் விடைகளை எழுத வேண்டும். சற்றுக் கடினமானவற்றை பின்னர் எழுதிக் கொள்ளவேண்டும். விடைகளைத் தெளிவாகவும், பொருள் உள்ளதாகவும் எழுதவேண்டும். வினாக்களுக்குரிய இலக்கங்களை சரியாக இடவேண்டும். உரிய படங்கள், விளக்கக்குறிப்புக்கள் என்பவற்றை விடைகளுடன் தகுந்தமுறையில் இணைக்கவேண்டும். விடைகள் எழுதி முடித்ததும் அடிக்கோடிட்டு அந்த விடையை நிறைவு செய்ய வேண்டும்.

05. விடைகளை எழுதி முடித்தபின் அதனை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். முதலாம் வினாவுக்கு விடையளித்த அதே அழகான எழுத்தில் இறுதி வினாவரை விடையளிக்க வேண்டும். இல்லையேல் உங்கள் பதட்டத்தை

அது வெளிப்படுத்துவதாக அமையும். ஒழுங்குபடுத்தப்பட்ட விடைத்தாள்களை சரிபார்த்துக் கட்டிக்கொண்டு மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பரீட்சைகளை வெற்றிகரமாக எழுதி வெற்றி பெற மேற்கூறப்பட்ட விடயங்களை எல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டால் பரீட்சை தொடர்பான பயம் நீங்கி பெரும் சுமையாக இருக்கும் பரீட்சைகள் சுலபமாக மாறி சித்தி பெறுவது உறுதி.

**திருமதி. வெண்ணிலா கேதீஸ்வரன்**
ஆசிரியர்



## சேவை நலன் பாராட்டு வாழ்த்துப்பா

அலை கடல் சூழ் அணிதிகழ்
அன்னைத் திருநாடாம்- ஈழத்திலே
தர்மத்தின் சிகரமாய்
தரணிபுகழ் செல்வமாய்
பனை சூழ்பேருரில் - பச்சிலைப்
பள்ளிப் பிரதேசத்தில்
வேம்போடுகேணியில் அவதரித்த
காருண்ய கமலமே
எங்கள் கனகமணி ஆசானே!

செய்கடமை மேலென்று கொண்ட நெஞ்சம்
சீருறவே அனைத்தினையும் ஆற்றும் கொள்கை
மெய்மையுடன் முழுமையுறச் சேவை தன்னை
சேய்நலத்தைக் குறியாக்கி ஆற்றும் நோக்கு
பிள்ளைகளின் மேன்மையினைக் குறித்த சிந்தை
தெய்வ அருள் நாடும் திடம் கொண்ட எங்கள்
அன்பு கனகமணி அவர் நீடுவாழ்க!

அகர முதல எழுத்து சொல்லித் தந்த எங்கள் ஆசானே
அடக்கம் தனை அறிய வைத்த எங்கள் அன்பு மங்கையே

ஆசை தீரப்பாடுகின்றோம் உங்கள் புகழையே

ஒழுக்கம் கற்றுத் தந்து ஊட்டி வளர்த்த எங்கள் கனகமணி ஆசானே,

உண்மை தனை எடுத்துரைத்த எங்கள் ஆசானே! ஆசானே!

உலகம் போற்ற வாழ வாழ்த்துகின்றோம் உங்களையே!

அன்போடு தடவி

அறிவுரையோடு ஆதரித்து – எம்முன்னே

அறிவின் சிகரமாய் அகவை அறுபதின்

மணிவிழா நாயகியே! உமை

வாழ்துகின்றோம்! வாழ்த்துகின்றோம்!

வானுயர வாழ்த்துகின்றோம்!

மணிவிழாக் காணும் ஆசிரியை கனகமணி ரீச்சர்

தன் ஓய்வுக் காலமதை நன்றாகக் கழித்து

நலமுடனும் மகிழ்வுடனும் வாழ

இறைவனைப் பிரார்த்திக்கும் எம் நெஞ்சம்

நம் ஆசான் கனமணி என்றும் வாழி! வாழி!

எங்கும் எப்போதும் எல்லாம் பெற்று

பல்லாண்டு வாழி!

**கு.ஜிவானி**
தரம் 11

# இசையெனும் காதலி

இசையில்லா இடமுண்டோ?.............
இசை என்பதே இப்பூவுலகின் அசைவு...........
இசை இல்லை என்றால்
பிரபஞ்சமே வெறுமையான பாலைதான்...........
பாலையிலும் பூப்பூக்கும்.........
இசையிருந்துவிட்டால்.........
கொட்டும் மழையும் இசைதான்
கத்தும் குயிலும் இசைதான்..........
குத்தும் உலக்கையும் இசைதான்
அழும் குழந்தையும் இசைதான்
பூ பூப்பதும்
காய் காய்ப்பதும்
இசையாலே தான்
பால் சுரப்பதும்
பால் வடிவதும்
இசையாலே தான்
தாலாட்டும் இசை தான்
தரணி எங்கும் இசை தான்
இசைதான் என்னுயிர்
இசையில்லா இடம் ஏதும் இல்லை

பாலையில் வீசும்

புழுதிக்காற்றும் கூட இசைதான்

இதனால் தானோ

சீர்காழி

“இசைகேட்டால் புவி அசைந்தாடும்”

எனப்பாடியுள்ளார்.

துன்பமே வாழ்க்கையின்

அச்சாணி ஆனாலும்

காதோடு கொஞ்சி

ஆறுதல் சொல்ல எப்பொழுதும்

என்னோடு இருக்கிறாள்

என் இரண்டாம் காதலி - இசை



**திருமதி. சு. டுயந்தினி**
ஆசிரியர்

# டெங்கு விழிப்புணர்வு

டெங்குக் காய்ச்சல் எவ்வாறு ஏற்படுகின்றது.?

டெங்குக் காய்ச்சல் Arbo virus கிருமியினால் உண்டாகும் நோயாகும். சில சமயங்களில் நோய் தீவிரமடையும் போது மூக்கு, பல்லீறு, மற்றும் தோலிலிருந்து இரத்தம் வடிதல் ஏற்படலாம். வாந்தி காப்பிக் கொட்டை நிறத்திலோ அல்லது மலம் கறுப்பு நிறத்திலோ வெளியேறும். இதிலிருந்து வயிற்றுக் குடலினுள் இரத்தம் வடிகின்றது எனக்கண்டு கொள்ளலாம். டெங்குக் காய்ச்சல் மற்றும் இரத்தம் வடிதல் இரண்டும் இருப்பதை டெங்கு இரத்தக்கசிவுக் காய்ச்சல் என்கின்றோம்.

டெங்குக் காய்ச்சல் எப்படி பரவுகின்றது?

டெங்கு என்ற ஸ்பானிய மொழிச்சொல் எலும்பு முறிக்காய்ச்சல் எனப்பொருள்படும். இந்நோய் ஒரு வகை வைரஸ் கிருமியினால் ஏற்பட்டு நுளம்புகளினால் காவப்பட்டு பரப்பப்படுகின்றது. இரண்டு வகை நுளம்புகளான Aedes Albopicturs , Aedes Aegyptiஇந்நோய்க் கிருமிகளைக் காவி சுகதேகிகளைக் கடிக்கும் போது அவர்களுக்கு பரப்புகின்றன.

இவை கடித்து இரண்டு முதல் 7 நாட்களுக்குள் நோய் ஏற்படும். இந்நோய்க் காவி நுளம்புகள் கறுப்பு நிறமானவை. இறக்கையில் வெள்ளி நிறப்புள்ளிகள் தென்படும். மற்றைய நுளம்புவகையுடன் (மலேரியா- அனோபிலிஸ் , யானைக்கால்- கியூலெக்ஸ்) ஒப்பிடுகையில் தோற்றத்தில் சிறியவை. முதுகில் வெள்ளி நிறக்கோடுகள் இரண்டு தெரியும். பெண்நுளம்புகள் தான் நோயைப் பரப்புபவை ஆகும்.

இவை கறுப்பு நிறமான முட்டைகளை தனித்தனியாக ஒரு தடிவையில் 30முதல் 100 வரை தண்ணீரின் மேல் ஈடும். இவை கடிக்கும் நேரம் சூரிய உதயத்தின் பின் இரண்டு தொடக்கம், 3 மணித்தியாயலங்களும் , பின்னேரம் சூரிய அஸ்தமனத்திற்கு முன் 2 தொடர்க்கம் 3 மணித்தியாலங்கள் எனக் கூறலாம். ஆனால் சில வேளைகளில் மாத்திரம் எல்லா நேரங்களிலும் கடிக்க வாய்ப்புள்ளது.

வெளியிலிருந்து வீட்டிற்குள் வந்து மனிதரின் இரத்தத்தை குடித்து விட்டு மீண்டும் வெளியே போய்த் தங்கும். எனனும் வீட்டினுள் தங்க வசதி கிடைப்பின் அங்கு தங்கிவிடும். இது சாதாரண சூழலில் 60 நாட்கள் வரை உயிர்வாழும். தற்போதைய வைத்திய முறைகள் மூலம் டெங்கு நோயைக் குணப்படுதத முடியாது. நோயின் தாக்கத்தைக் குறைத்து மரணங்களைக் குறைக்கலாம். இந்நுளம்புகள் கடிக்காதவாறு பார்த்துக்கொள்வதன் மூலமும் அவை பெருகும் இடங்களை அழிப்பதன் மூலமுமே நோய் ஏற்படுவதையும், பரவுவதையும் முற்றாக தடுக்கமுடியும்.

நாம் வெளிவிடும் மூச்சுக் காற்றே நுளம்புகள் எம் இருப்பிடங்களைக் கண்டுபிடிக்க உதவுகின்றன. உயிரினங்கள் வெளிவிடும் மூச்சுக் காற்றில் காபனீரொட்சைட்டு வாயு காணப்படுகின்றது. அதனைக் கொண்டே இந்நுளம்புகள் தேடி வந்து எம்மைக்கண்டு கொள்வதுடன் இரத்தத்தை உறிஞ்சிக் கொள்வதன் மூலம் தாம் பிறரிடம் இருந்து பெற்றுவந்த நோய்க்கிருமிகளையும் செலுத்திவிடுகின்றது.

நோய்க்கணிப்பு

உடலில் நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட வெள்ளை அணுக்களின் மொத்த அளவை பரிசோதனை செய்தல். அதாவது இரத்தத்தில் சாதாரணமாக இருக்கவேண்டிய லியுகோசைட் என்ற வெள்ளை இரத்த அணுக்களின் அளவு எவ்வளவு என்பதனை பரிசோதனை செய்தல்.

த்ராபோசைட்டோபீனியா டெங்குக் காய்ச்சலின் போது இரத்தத்தில் உள்ள இரத்த வட்டுக்களின் (Plates) எண்ணிக்கை குறைவாகக் காணப்படும். டெங்க வைரசிற்கு எதிராக உடல் உற்பத்தி செய்யும் ஆன்ட்டி- பாடி என்று அழைக்கப்படும் எதிர்ப்பு சக்தியை பரிசோதனை செய்யும் இரத்த நிணநீர் பரிசோதனைகள் இந்த நோயைக் கண்டுபிடிக்கப்பயன்படுத்தப்படும்.

சிகிச்சை

டெங்குக் காய்ச்சலைப் பொறுத்தவரை ஓய்வும், திரவ வகை உணவுகளுமே அதிகம் உடலினுள் ஏற்றப்படுவதும் உடல் உஸ்ணத்தைக் குறைக்க அசிட்டாமினோபென் மாத்திரைகள் ஆகியவை அவசியம். மேலும் மருத்துவமனையில் அனுமதிக்கப் படுவது மிகவும் அவசியம்.

நுளம்புக் கடியில் இருந்து நம்மைப் பாதுகாப்பதன் மூலம் டெங்கு நோய் பரவுவதனைத் தடுக்கலாம். மேலும் எமது வாழ்விடங்களுக்கு அருகில் தண்ணீர் தேங்காது பார்த்துக்கொள்ள வேண்டும்.

இந்நோயின் அறிகுறிகள் 4 நிலைகளில் தென்படும்.

1. அறிகுறிகள் இல்லாத காய்ச்சல் நிலை
2. ஆரம்ப நிலை டெங்குக் காய்ச்சல் நிலை

3. இரத்தப்பெருக்குடன் கூடிய டெங்குக் காய்ச்சல் நிலை
4. டெங்கு அதிர்ச்சி அறிகுறி நிலை

டெங்கு நோயின் அடையாளங்கள்

1. கடுமையான காய்ச்சல்
2. தலைவலி
3. கண்களுக்குக் கீழாலும் தசைகளிலும் மூட்டுக்களிலும் வலி ஏற்படுதல்
4. பசியின்மை
5. வாந்தி ஏற்படுவதோடு தோலில் சிவப்புநிறப் புள்ளிகள் ஏற்படுதல்.

நோய் அடையாளங்கள் தென்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

1. காய்ச்சலின் போது ஓய்வு எடுக்கவேண்டும்.
2. காய்ச்சலைக்கட்டுப்படுத்துவதற்காக நீரினால் உடம்பு முழுவதும் ஒத்தடம் கொடுக்கவேண்டும்.
3. ஒவ்வொரு 6 மணித்தியாலத்தின் பின்னரும் பரசெடமோல் வகையைச் சேர்ந்த வில்லைகள் உட்கொள்ள வேண்டும்.
4. இரத்தப்போக்கிற்கான அடையாளங்கள் தென்பட்டால் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும்.

குறிப்பு: முக்கியமாக டெங்கு நுளம்புகள் பெருகுவதைத் தடுக்கவேண்டும். இதன் மூலமே டெங்கு நோயிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள முடியும்.

**செல்வி. நயனி சிவலிங்கம்**
*ஆசிரியர்*

## எம்பள்ளிக்கான பார்வை..

எமது பாடசாலை இன்று பார்க்கின்ற அனைவராலும் வியக்கும் விதத்தில் அழகுற அமைந்துள்ளது ஏதோ உண்மைதான். இன்றைய நிலைக்கு முந்தைய காலங்களை ஆழமாய் இல்லாதுவிடினும் மேலோட்டமாய் ஆராய்ந்து பார்த்தால் எம்பள்ளியும், அயலும் வேண்டிய அடிகளின் ஆழத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாய் இலங்கைத் தீவில் போர் நடந்தது உண்மைதான். ஆனால் இப்போர்களிற்கெல்லாம் மையம் கொண்ட பூமியாய் அமைந்தது எம்பள்ளியின் அமைவிடம் தான். இத்தாவில் எனும் ஊர் உலகமறிந்த இடமானதும் இதனால் தான். இரண்டாயிரமாம் ஆண்டிற்கு முன் இத்தாவில் என்னும் ஊர் அதிகம் அறியப்படாதிருந்திருந்த காலம். அப்போது எம் பாடசாலையில் சுமார் 700 மாணவர் வரை கற்ற காலம் இருந்தது. பளை மத்திய கல்லூரிக்கு அடுத்த நிலையில் உயர்தரக்கல்விக்கான பள்ளியாய் ஆகக்கூடிய தகுதிநிலை எமக்குத் தான் இருந்தது. அப்போது தான் போர்நிலை உச்சங் கொண்டதும், எம்பள்ளி அடையாளமே தெரியாத அழிவுக்குள்ளாகி மண்மேடானதும் நிகழ்ந்தது. இத்தாவில் சந்தியில் ஏ9 வீதிக்கு அருகாய் இருந்து நாங்கள் ஆரம்பக்கல்வி பயின்ற காலத்தை நினைத்துப் பார்க்கின்றோம். பாடசாலையின் நடுமுற்றத்தில் நின்ற இரண்டு கறுத்தக்கொழும்பான் மாமரங்களை நினையுங்கள். ஏலத்தில் விட்டுக் காசு சேர்த்த காலமும் இருந்தது. அம்மாமர நிழலில் குந்து கட்டி அதன் மேல் பால் காய்ச்சி நாமெல்லாம் வரிசையாய் நிற்க சிதம்பரம் ஆச்சி பாலூற்றித்தந்த ஞாபகம் வரவில்லையா? சைக்கிள் வண்டியில் பெட்டி கட்டி அதனுள் அழகழகாய் பணிஸ் அடுக்கி வந்து எம் பசி போக்கிய வேளைகளை

மறப்போமா. பள்ளி வளவில் ஓங்கி உயர்ந்திருந்த ஒன்று இரண்டு தென்னை மரங்களையும்,கழிப்பறையின் அருகில் இருந்த பாலை மரத்தையும் மறந்திடுமோ மனம்.

இந்நிலை இருந்து உயர் நிலைக்கு பள்ளி உயர்ந்த போது கனகராசா சேர் அதிபராய் இருந்த காலத்தில் 1992 காலப் பிற்பகுதியில் இன்று பாடசாலை அமைந்துள்ள இவ்விடத்திற்கு பகுதியாய் வந்தோம். அக்காலப்பகுதியில் பள்ளியின் பெயர் எல்லா நிலையிலும் உயர்ந்து எம் பள்ளிப் பிள்ளைகள் பலர் உயர்தரம் கற்க சிறந்த பெறுபேறுகளுடன் பளை மத்திய கல்லூரி சென்று உயர் தரம் கற்று பல்கலைக்கழகம் சென்று பட்டங்கள் பெற்றும் உள்ளனர். இன்று பலர் புலம்பெயர் நாடுகளில் புகழ் விளங்க உள்ளனர். உள்நாட்டிலும் பலர் உயர் பதவிகளையும் அலங்கரிக்கின்றனர்.

இவ்வாறாய் சிறந்து விளங்கிய போது தான் 2000ஆம் ஆண்டு வந்தது. அதன் பின் அடிக்கடி அவலம் தான் எம்மைச் சூழ்ந்தது. அக்கினிச் சுவாலைகள் எம் ஊரின் அழகைத் தின்றது. போர்த்தரப்பு இரண்டினதும் எல்லைக் கிராமமாய் எம்மூர் ஆனது. இரண்டு பகுதியும் சொல்லிச்சொல்லி அடித்த செல்களால் எம்மூர் ரணகளமானது. எம்மக்கள் ஊர் திரும்பி வந்த போது குருதிக் குளிப்பில் ஊறிய மண் எங்கும் மண்டையோடுகளும்,மனித எலும்புகளுமாய் சிதறி இருந்தது. ஐம்பது நூறு ஏக்கராய் இருந்து ஊரிற்கு அழகு சேர்த்த தென்னந் தோப்புக்களும் கற்பகதருவாய் நின்ற பனங்கூடல்களும் காணாமல் போயிருந்தன. மாங்காய் பிடுங்கி மகிழ்ந்த மாமரங்கள் அடியோடு அழிந்திருந்தன. அயலூர்

வேம்போடுகேணி பெயர் தாங்கி நின்ற வேப்பமரங்கள் வேர் கிளம்பி செல்லடியில் சிதைந்திருந்தன. இவை அனைத்திற்கும் மத்தியில் தான் நாங்கள் அகரம் கற்ற பள்ளியைத் தேடினோம். பற்றைகள் மூடி புதர் மண்டி மண்மேடாய் இருக்கக் கண்டோம்.

போர் மௌனித்தது. ஊர்திரும்பி பள்ளியும், கிராமமும் மீள் எழுகை பெற்றுள்ளது. ஆரம்பம் மண்மேடாயும் அடுத்தது மாடியாயும் உயர்ந்துள்ளது உண்மையே. பச்சிலைப்பள்ளியில் எங்கும் இல்லாதவாறு அழகுசேர் மைதானம்,என்றும் வற்றாத பெருங்கிணற்று நீர்தாங்கி நிற்கும் நீர் தாங்கி, பார்க்கும் இடமெங்கும் நீர் பருகும் வசதிகள், உயர் தொழில்நுட்ப வசதியுடன் அமைந்த மின் இணைப்புக்கள், நவீன மாபிள் பதித்த போதுமான கழிப்பறைகள், வசதியாய் அமைக்கப்பட்ட சமையற்கூடம், உணவருந்தும் மண்டபம், கழிவகற்றல் முகாமைத்துவ வசதிகள், பாதுகாப்புக் காவலாளிக்குத் தனியறை வசதி, அளவான ஆய்வுகூடம், கணனிகள் வழங்கா நிலை இருப்பினும் வசதிமிக்க கணனியறை, வகுப்பறை இயங்கினாலும் பெயர்தாங்கி நிற்கும் நூலகம், கூட்டம் கூட மேடையுடன் கூடிய எண்பதடியில் சுவிஸ் நங்கை பெயர் தாங்கிய "லேயா" மண்டபம், துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம், மண்ணீர் காக்கும் தண்ணீர்த்தொட்டிவடிகாலமைப்பு, என இன்னோரன்ன வசதிகளை இன்று வாய்க்கப்பெற்றுள்ளோம். வளங்கள் சேர்க்கும் வாய்ப்புக்கள் அதிகம் இருந்தாலும், எங்கள் இறுதி இலக்கு கல்வி அடைவே தான்.

மேற்சொன்ன வசதிகளுடன் எம்பள்ளி அமைந்திருந்தாலும் ஆறு ஏக்கர் கொண்ட எமது பள்ளிக்கான காணியானது நிரந்தர

ஆவணமின்றிய நிலையில் நீதிமன்ற செயற்பாட்டிற்குட்பட்டு அலைச்சல்களும், செலவுகளும் அதிகரித்து முடிவில்லாது நீண்டு செல்வது ஆரோக்கியமானதாக இல்லை என்பதை சகல தரப்பினரும் விளங்கி உதவிட முன்வருமாறு வினயமாக வேண்டிக்கொள்கின்றோம்.

இவ் இடர்கள் மத்தியிலும் கல்வி இலக்கை அடைய நிறைவாய் உழைக்கின்றோம். அடைவுகள் போதாமையும் உண்மையே. காரணத்தை ஆராய்ந்த போது பல உண்மைகள் அறியப்பட்டன. போர்க்கால அவலங்களும், அதன் வழிவந்த வறுமை நிலையும், பல மாணவர்கள் ஆரம்பக்கல்விக் காலத்தை போரிற்குள் தொலைத்து நின்ற நிலையும், உழைப்போரை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், நிறுவன வீடு கட்டிமுடிக்க பட்ட கடன் அடைக்கமுடியா நிலைகள், பொறுப்பற்ற நிலையில் இருக்கும் மதுவுக்கு அடிமையான தந்தையர், தொலைக்காட்சி நாடகங்களில் மூழ்கியுள்ள அன்னையர், இன்று பள்ளிக்கல்விக்கு வலுச்சேர்க்கும் தரமான ரியூசன் வசதி எம்மூரிலே இல்லாத நிலை, மாணவர்களின் செல்லிடத் தொலைபேசிப் பாவனை எனப் பல்வேறு காரணிகள் கண்டறியப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் தாண்டி எம் பிள்ளைகளின் அறிவுப் பசிக்குத் தீனி போடவேண்டிய பொறுப்பு அனைத்துத் தரப்பிற்கும் உண்டு.

எம் பாடசாலைக்கு பிள்ளைகளைத் தரும் ஊட்டப்பிரதேசங்களாக இத்தாவில், வேம்போடுகேணி, அரசர்கேணி, செல்வபுரம், முகமாலை என இவ் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளிலுமாக சுமார் 104 குடும்பங்கிளில் இருந்து 180 வரையான மாணவர்கள் கற்க வருகின்றார்கள். இன்று இத்தாவில் கிராம

அலுவலர் பிரிவானது பளைப் பிரதேசத்திலேயே பெரிய குடியேற்றக்கிராமமாக மாறி வருகின்றது. ஏற்கனவே சதாபுரம் எனும் சுமார் 30 வரையான குடும்பங்களைக் கொண்ட கிராமம், அடுத்து நல்லம்மா தோட்டப் பகுதியிலும் சுமார் 20 வரையான குடும்பங்களைக் கொண்ட கிராமம், அதனைத் தொடர்ந்து கோவிற்காடு எனும் சுமார் 100 வரையான குடும்பங்களைக் கொண்ட கிராமமும், இறுதியாக பிலிப்பர் துண்டு 25 வீட்டுத்திட்டக் கிராமமும் ஆக உருவாக்கம் பெற்றுள்ளது. மேலும் அயலூரான இந்திராபுரம் எனும் சுமார் 150 குடும்பங்களைக் கொண்ட கிராமமும் பகுதியாக மீள் அமர்வுக்கு அனுமதிக்கப் பட்டுள்ளமையால், அடுத்த ஆண்டில் எம்பள்ளிக்கான மாணவர் வரவு திடீர் உயர்வுக்குள்ளாகும் நிலையை மறுப்பதற்கில்லை. எனவே எமது பள்ளியின் மீள் எழுகையானது சகல நிலைகளிலும் உயர்வுத் தன்மையடைய இடமுண்டு.

எமது பள்ளி அமைந்துள்ள இடத்தைச் சுற்றி ஆத்மீகப் பணியாற்ற வேம்போடுகேணியில் நவனிவெளி அம்பாள் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், பட்டாணி வைரவர் ஆலயம், காளி அம்மன் ஆலயம், பாலையடி வைரவர் ஆலயம், கண்ணகை அம்பாள் ஆலயம். ஞானவைரவர் ஆலயம், செல்வபுரம் கிராமத்தில் முருகன் ஆலயம், கச்சார்வெளிக் கிராமத்தில் விநாயகர் ஆலயம், A9 வீதி ஆனைவிழுந்தான் வயற்பிரதேசத்தில் வைரவர் ஆலயம், அரசர்கேணி - இத்தாவில் நடு எல்லையில் மெண்டுவான் வைரவர் ஆலயம், கோவிற்காட்டுப் பிள்ளையார் ஆலயம், அரசர்கேணிப் பிள்ளையார் ஆலயம், இத்தாவில் முருகமூர்த்தி ஆலயம், அம்பளவளை இரட்டை அம்மன் ஆலயங்கள், சதாபுரம் காளியம்மன் ஆலயம், அத்துடன் சக கிறிஸ்தவ மத அன்பர்களுக்காக பார்பறம்மா தேவாலயம்,

பிலபத்தேமியா வழிபாட்டிடம் எனப் பல்வேறு வழிபாட்டுத்தலங்கள் அமைந்து மக்களுக்காக ஆத்மீகப் பணிகள் ஆற்றுகின்றன. மேலும் இத்தாவில் சரஸ்வதி சனசமூகநிலையம், உதயதாரகை சனசமூக நிலையம், உதயதாரகை முன்பள்ளி, இத்தாவில் சரஸ்வதி கலாமன்றம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர்கிராம அபிவிருத்திச்சங்கங்கள், சமுர்த்திச் சங்கங்கள், விவசாயிகள் கழகங்கள் எனும் சமூக அமைப்புக்களும் எழுகை பெற்றுள்ளன. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் எமது பழம்பெரும் விளையாட்டுக் கழகமான இத்தாவில் கென்னடி விளையாட்டுக் கழகமானது புதிய தலைமையின் கீழ் மீளெழுகை பெற்று, ஆரம்பமே வேகம் கொண்ட செயற்பாடுகளினால் ஈர்க்கப்பட்ட இளைஞர், யுவதிகளால் மாலை வேளை மைதானம் நிறைந்துள்ளதைப் பார்க்கும் போது மகிழ்ச்சியளிக்கின்றது.


எனவே வரலாறானது திரும்பத் திரும்ப நிகழும் என்பற்கிணங்க இன்று வந்துள்ள காலத்தை எங்கள் உயர்வுக்கானதாய்க் கொள்வோம். உறுதிபூண்டு அனைவரும் ஒருங்குசேர உழைப்போம். எம்பள்ளியின் உயர்வும் அதன் அயற்கிராமங்களின் வளமும் ஓங்கி உயர கைகோர்ப்போம் வாருங்கள். எம்மூர் புலம்பெயர் உறவுகளே உங்களின் இணைவுகள் தான் எமக்கான பலம். வளமூட்டும் வளம். வாழ்வோம். வாழவைப்போம் வாருங்கள்.

நன்றி

பார்வை செய்தவர்

**திரு. க. சுந்தரலிங்கம்**

இத்தாவில்,பளை.


மணிவிழா நாயகி
ஆசிரியர்
செல்வி. கனகமணி வீரவாகு

## மணிவிழா நாயகியின் உள்ளத்தில் இருந்து....

கிளி/ வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலையில் 1981ஆம் ஆண்டிலிருந்த எனது கல்விப்பணியை ஆரம்பித்தேன். அப்போது தரம் 5 வரையான வகுப்புக்கள் ஏ9 வீதியோரமாகவுள்ள சிறிய கட்டத்தில் செயல்பட்டு வந்தது. பின்வு 16.03.1990 இல் நிரந்தர நியமனம் கிடைத்தது. இப்பாடசாலையிலேயே எனது பணியைத் தொடர்ந்தேன். 2000ம் ஆண்டு இடப்பெயர்வின் போது கிளி.'. பளை றோ.க.த.பாடசாலையிலும் பின்னர் மீண்டும் கிளி/ வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலையிலும் 2006ம் ஆண்டு இடப்பெயர்வின் போது கிளி/ சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்திலும் அதனை அடுத்து செட்டிகுளம் இராமநாதன் முகாமுக்குள் வவு/ திருவள்ளுவர் வித்தியாலயத்திலும், முகாமை விட்டு வெளியேறிய பின்பு கிளி/ பளை மத்திய கல்லூரியிலும் 12.09.2012இல் இப்பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டபோது அன்று தொடக்கம் எனது ஓய்வு நாளாகிய இன்றுவரை இங்கேயே கடமை புரிந்துள்ளேன். தொடக்கமும் முடிவும் இங்கே தான் என்பது இறைவனின் தீர்மானமாக உள்ளது. எனது 36 வருட கல்விப் பயணத்தில் பல அதிபர்களுடன் சேவையாற்றிய அனுபவங்கள், நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுடன் பணியாற்றிய நினைவுகள் நிழலாடுகின்றது. தொலைக்கல்விப் பயிற்சி நெறி நண்பர்கள், சிரேஸ்ட விரிவுரையாளர் மரியதாஸ் சேர், ஏனைய விரிவுரையாளர்கள் அக்காலப் பகுதியில் கோட்டக்கல்வி அதிகாரியாக இருந்த திரு.ப.அரியரத்தினம் சேர் அவர்களின் வழிப்படுத்தல்கள் எல்லாம் மலரும் நினைவுகளாக வந்து செல்கின்றது.

எனது சேவையைப் பற்றி பலரும் புகழ் மொழிகள் கூறினாலும் அவற்றுக்கெல்லாம் நான் தகுதியானவள் தானா என என்னை நானே கேட்கத் தூண்டுகின்றது. உண்மையில் நான் தான் பலரிடம் கடமைப்பட்டுள்ளேன். அவற்றை எக்காலத்திலும் அடைக்கமுடியாது.

எனது ஓய்வூதியம் பெறுவதில் தற்போது வலயத்தில் கடமைபுரியும் முகாமைத்துவ உதவியாளர் செல்வி.ஈ.கம்சா அவர்கள் எனது பணியைத் தனது பணியாகக் கருதி அர்ப்பணிப்பான சேவை புரிந்துள்ளார். அவர் என் மனதில் நன்றிக்குரியவராக என்றும் இருப்பார். எனது பணிக்காலத்தில் எனக்கு உதவிய வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மறக்கப்படமுடியாதவர்கள் ஆவார்.

எனது சொற்ப சேவைக்காக பெரியளவில் மணிவிழா எடுத்து எனது தகுதிக்கும் மேலாக என்னைக் கௌரவித்துக்கொண்டிருக்கும் முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர்கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், ஏனையை உத்தியோகத்தர்கள், குறிப்பாகப் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் என்னிடம் கல்வி பயின்ற, கல்வி பயிலாத அன்புறவுகள் அனைவருக்கும் நானும், எனது குடும்ப உறவுகளும் என்றும் நன்றியுணர்வுடன் இருப்போம் என்பது திண்ணம்.

ஓய்வு காலத்தில் நோயாளியாக உள்ள வயது முதிர்ந்த எனது தாயைப் பராமரிக்கும் பாரிய பொறுப்பு எனக்குள்ளது. மேலும் நேரங் கிடைக்கும் போது என்னால் முடிந்தவரை பாடசாலைக்கு உதவி செய்ய முயற்சிப்பேன். ஆலயத்தொண்டுகளில் ஈடுபடவும் எண்ணியுள்ளேன்.

இறுதியாக எனக்கு இம்மணிவிழா ஏற்பாடு செய்த அனைவருக்கும் வாழ்த்துச் செய்திகள், வாழ்த்துரைகள். பாமாலை,பூமாலை, நிதியுதவிகள், சரீர உதவிகள். மற்றும் எல்லா விதமான உதவிகள், ஒத்தாசைகள் வழங்கிய அனைவருக்கும் மீண்டும் , மீண்டும் என் நன்றிகளை பகர்கின்றேன்.

நன்றி

இங்ஙனம்

**செல்வி. கனகமணி வீரவாகு**

ஓய்வுபெறும் ஆசிரியை.



# நிமல் வெல்டிங் & வேக்ஸ் சொப்

# NIMAL WELDING & WORK SHOP

அம்மன் வீதி, மீசாலை, சாவகச்சேரி. **077 3456552** **077 2791811** இத்தாவில், பளை.

நீங்கள் விரும்பிய டிசைன்களில் ஓடர் செய்தும்
றெடிமெட் ஆகவும் பெற்றுக் கொள்ளக் கூடிய பொருட்கள்
அனைத்தும் அனுபவம் மிக்க வேலை ஆட்களால்
சிறந்த தரத்தில் 10 வருட உத்தரவாதத்துடன்
செய்து தரப்படும்.



சிறப்புத் தகவல்: வாகன வசதி இலவசமாக செய்து தரப்படும்.





கிங்ஸ் பதிப்பகம்
புத்தூர்ச்சந்தி, மீசாலை. - 0212050495